# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,077 — 1934 ம் ஹு புரட்டாதிமீ 7 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணிக் குத்தகை விற்பனை அறிவித்தல்கள்.

*கீழ் மாகாணத்தில் நடத்தவிருக்கும் காணிக்குத்தகை விற்பனவு.*

பின்னல் விபரிக்கப்படும் பூமித்துண்டை வீடுகட்டி பாவிப்பதற்காக அரசாட்சியாரின் 99 வருடக் குத்தகையின் கட்டுப்பாடுகளின் பிரகாரம் 1934 ம் ஆண்டு ஐப்பசிமீ 20 ந் தேதி, சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஏலத்திற்கூறி விற்பார். ஏற்படுத்திய குத்தகை கிரயத்திற் கூடிய கேள்விக்காரனுக்கே குத்தகைக்குக் கொடுக்கப்படும். குத்தகையின் நிபந்தனைகளும் இப்பூமியைப்பற்றிய மறு விபரங்களும் கீழ் மாகாண அரசாட்சி ஏசண்டரிடத்திலும் அதன் படம் அளவைக் கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பிளான் இல. 6,392. கிராமம்—பொத்துவில் 2 ம் குறிச்சி. பற்று—ஏருவூர். டிஸ்திறிக்—மட்டக்களப்பு.

| கண்டம். | காணியின் பெயர். | விபரம். | கேள்விககாரனின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | ஏக்கரொன்றுக்கு கூறும் விலையாக நிச்சயித்த குத்தகைக் கிரயம் ரூ. ச. | முதல் 30 வருஷங்களுக்கும் ஏக்கரொன்றுக்கு வருடாந்த குத்தகை: முதல் 6 வருஷங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. ச. | மீதியாயுள்ள 24 வருஷங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 27B | வெள்ளடுவெக்காடு .. | சேனை .. | பண்டாரவெளை, டெ. லோறென்ஸ் பெரேரா | 2 3 18 | 1 80 | .. 0 60 | 1 80 |

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஹு புரட்டாதிமாசம் 5 திகதி.

சீ. வீ. பிறெயின்,
காணிக் கொம்மிஷனர்.

---

*கீழ் மாகாணத்தில் நடத்தவிருக்கும் காணிக்குத்தகை விற்பனவு.*

பின்னல் விபரிக்கப்படும் பூமித்துண்டை தென்னைச் செய்கைக்காக அரசாட்சியாரின் 99 வருடக் குத்தகையின் கட்டுப்பாடுகளின் பிரகாரம் 1934 ம் ஆண்டு ஐப்பசி மாசம் 20 ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஏலத்திற் கூறிவிற்பார், ஏற்படுத்திய குத்தகைக் கிரயத்திற் கூடிய கேள்விக்காரனுக்கே குத்தகைக்குக் கொடுக்கப்படும். குத்தகையின் நிபந்தனைகளும் இப்பூமியைப்பற்றிய மறு விபரங்களும் கீழ் மாகாண அரசாட்சி ஏசண்டரிடத்திலும் அதன் படம் அளவைக் கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

உன்னிச்சைப் பிளான் இல. 9. கிராமம்—கரடியனாறு. பற்று—ஏருவூர். டிஸ்திறிக்—மட்டக்களப்பு.

| கண்டம். | காணியின் பெயர் | விபரம். | கேள்விக்காரனின் பெயர். | விசாலம் ஏ. று. ப. | ஏக்கர் ஒன்றுக்கு கூறும் விலையாக நிச்சயித்த குத்தகைக் கிரயம் ரூ. ச. | முதல் 30 வருஷங்களுக்கும் ஏக்கரொன்றுக்கு வருடாந்த குத்தகை: முதல் 6 வருஷங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. ச. | மீதியாயுள்ள 24 வருஷங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 306B | கரடியனாற்றுக்காடு | சிறுகாடு | மட்டக்களப்பு, கந்தையா கைம்பெண் பொன்னம்மா | 30 2 21 | 14 30 | 0 60 | 1 80 |

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு. 1934 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 5 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நிலைத்திருக்கின்ற K L/கலவேகொடா தமிழ் பாடசாலையை நன் நிலைபரத்திற்குக்கொண்டு வருதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 363. குறிச்சி—கலவேகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | உவாட் இல. 4 சோலை வரி இல. 2837 னின் பகுதியான பெறகிகேலவத்தை அல்லது பெற்றிகேவத்தை | ஒரு மரம், ஒரு பலாமரம், 30–40 வரையில் வயதுள்ள 2 காபொக் மரங்கள், 10–20 வயதுள்ள 14 கமுக மரங்கள், ஒருபாது காப்புச் சுவரின் பகுதி அடங்கிய தோட்டம் | கலவேகொடாவைச்சார்ந்த மீரா இலெவ்வை மரைக்கார் முகம்மது மரைக்கார் | 0 0 6 |
| 2 | உவாட் இல. 4 சோலை வரி இலக்கங்கள் 2834, 2835, 2836 தின் பகுதிகள், பெறகிகேவத்தை அல்லது பெறகிகேவத்தை | 7 பலாமரங்கள், 15–30 வரையில் வயதுள்ள 2 தென்னை மரங்கள் அடங்கிய தோட்டம் | கலவேகொடாவைச்சார்ந்த உடுமா இலெவ்வை மரைக்கார் அப்துல் றசாயக், மீரா இலெவ்வை மரைக்கா முகம்மது சேயின, இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார், முகம்மது சம்ஜதீன், இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார் முகம்மது ஆமீர், இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார் சாகீத் | 0 0 15·6 |
| 3 | உவாட் இல. 4 சோலை வரி இல. 2834 லின் பகுதி | நீடித்த காலத்துக்குரிய கட்டடம் | கலவேகொடாவைச்சார்ந்த உடுமா இலெவ்வை மரைக்கார் அப்துல் றசாயக் | 0 0 3 |
| 4 | உவாட் இல. 4 சோலை வரி இல. 2835 தின் பகுதி | ஷை .. | கலவேகொடாவைச்சார்ந்தவர்களாகிய இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார் முகம்மது சம்ஜதீன், இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார் முகம்மது ஆமீர் இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார் சாகீது | 0 0 1·2 |
| 5 | உவாட் இல. 4, சோலை வரி இல. 2836 தின் பகுதி | ஷை .. | கலவேகொடாவைச்சார்ந்த மீரா இலெவ்வை மரைக்கார் முகம்மது சேயின் | 0 0 1·3 |
| 6 | உவாட் இல. 4, சோலை வரி இல. 2830 தின் பகுதி, நாறன்காகவத்தை | 7 தென்னை மரங்கள், ஏறக்குறைய 30 வயதுள்ள 4 பலா மரங்கள், 3–10 வரையில் வயதுள்ள 3 பலாக் கன்றுகள், ஏறக்குறையப் 15 வயதுள்ள, 2 மாமரங்களும், 6 கித்துள் மரங்களும், ஒரு பில்லின் மரம், 3 நாவா மரங்கள், ஏறக்குறைய 10 வயதுள்ள 2 மூலைக் காணி மரங்கள் அடங்கிய தோட்டம் | கலவேகொடாவைச்சார்ந்த அசனு மரைக்கார் அப்துல் வாஹித், இஸ்மேயில் இலெவ்வை மரைக்கார் முகம்மது சம்ஜதீன், காசிம் இலெவ்வை மரைக்கார் சாய்கு அப்துல்காதர் மரைக்கார், அசனு இலெவ்வை முகம்மது காசிம் | 0 0 19·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஞூ ஐப்பசி மாசம் 6 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த்தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1934 ம் ஞூ ஆவணிமீ 31 ந் உ.

ஜே. லேட்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

———

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யாப்பகுவவில் புராதன கட்டட ஆராச்சிச் சேமிப்புக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

1888 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 1 ம் இலக்க அநுபந்தம். குறிச்சி—வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்கில் வன்னிஹற்பத்துவில், பஹாலவிசிதெக்க கோறளையில் யாப்பகுவ என்னும் கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 11A | துககஹமுலவத்த .. | தென்னந்தோட்டம் .. | வீ. ஏ. எம். மொகமது மொகைதீன், யாப்பகுவ | 0 3 26 |
| 15A | யாப்பகுவபான்சால்வத்த | ஷை .. | யாப்பகுவக் கோவிற் பொறுப்பாளர் .. | 0 1 34 |
| 15B | ஷை .. | சேனை .. | ஷை .. .. | 3 3 3·8 |
| 18 | துககஹமுலவத்த .. | தென்னந்தோட்டம் .. | வீ. ஏ. எம். மொகமது மொகைதீன், யாப்பகுவ | 0 1 10·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாதி மாசம் 29 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1934 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாதிமீ 3 ந் உ.

ஸீ. ஹெரிசன் ஜோன்ஸ்,
வடமேல் மாகாண உதவி அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மின்சார யந்திரசாலை உத்தியோகஸ்தருக்கும் சுகாதாரச்சங்க வேலையாட்களுக்கும் வீடுகள் கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அவசரமாகவே :—

பிரதமபடத்து இல. A 276. குறிச்சி—வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் பொல்காவலைச் சுகாதார எல்லைக்குள்ளிருக்கும் கல்பொடகம (ஒரு பகுதி).

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | சாப்புவேவத்த 871 ம் வரி இலக்கங் கொண்ட காணியில் ஒரு பகுதி | தென்னந்தோட்டம் .. | டண்டகமுவலைவச்சேர்ந்த டபிள்யு. எச். ஜயசுந்தர | 0 | 2 | 13·4 |
| 2 | 871 ம் வரி இலக்கங்கொண்ட காணியின் ஒரு பகுதி | வண்டிற்பாதை .. | ஷை .. | 0 | 0 | 5·4 |
| 3 | சாப்புவேவத்த 871 ம் இலக்கக் காணியின ஒரு பகுதி | தென்னந்தோட்டம் .. | ஷை .. | 0 | 0 | 21 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ஆண்டு (ஒக்ரோபர்) ஐப்பசி மாசம் 4 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு பொல்காவலை மின்சாரக் கந்தோரில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1934 ம் ஆண்டு (ஆகஸ்ற்) ஆவணிமீ 31 ந் உ.

ஸீ. ஹெரிசன் ஜோன்ஸ்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

கீழே குறிக்கப்பட்ட வேலைகளை முடித்துக்கொடுப்பதற்கு முத்திரை வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 1934 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 28ந் திகதி பிற்பகல் 2 மணிவரைக்கும் புத்தளம் கச்சேரியில் புத்தளம் சலாபம் பகுதிச் சுகாதார சங்கத்தலைவரால் ஏற்றுககொள்ளப்படும்.

கற்பிட்டி சுகாதார சங்க எல்லைக்குள்.

(a) ஒவ்வொரு நாளும் எல்லாத் தெருக்களையும், கான்களையும் கூட்டுதலும், கூட்டப்பட்ட கூளங்களைத் தூரத்தில் திருப்திகரமாக அப்புறப்படுத்திவிடுதலும், அக்கூளத்துக்குக கொந்திறுத்துக்காரர் உருமையுடையவராக விருப்பார்.

(b) ஒவ்வொரு நாளும் பட்டணத்துக் கக்கூசையும், சில சொந்தக் கக்கூசுகளையும் துப்பரவாக வைத்துக்கொள்வதுடன் மலசலாதிகளை எடுத்துத் திருப்திகரமாக அப்புறப்படுத்திவிடுதலும், அம்மலசலாதிகளுக்கு கொந்திறுத்துக்காரர் உரிமையுடையவராக விருப்பார். கொந்திறுத்துக்காரர் இவ்வேலைகளுக்காக ஒவ்வொரு நாளும் 3 ஆண் வேலையாட்களும், 3 பெண் வேலையாட்களும், 3 யாடும், இரட்டைமாட்டுக் கரத்தை யொன்றும், மலசலங்கள் கொண்டு போவதற்கு ஒரு வேலை ஆளும், ஒரு கரத்தைக்காரனும் கொடுத்தல் வேணடும்.

2. ஒரு வருஷத்திற்கு இவ்வளவென்று குறிப்பதுடன் 1, 2 அல்லது 3 வருஷங்களுக்கு மேல்வரும் கொந்திறுத்துத் தொகையையும் விருப்பமானால் குறித்து அனுப்பலாம்.

3. சுகாதார சங்க எல்லைக்குள்ளேனும், அல்லது எல்லைக்குள்ளிருந்து அரை மைலுக் கப்பாலேனும் கூட்டப்பட்ட கூளங்களைக கொண்டுபோய்ப் போடுவதானால், இரண்டடி தாள்வில் குழிகள் வெட்டி அக்கூளங்களால் ஒரு கெடுதியும் உண்டாகாத வண்ணம் அவைகளை அக்குழிகளில் போட்டு உடனே மண்ணினால் மூடிவிடல் வேண்டும்.

4. வேறு விபரங்களும், கேள்விப்பத்திரம் அனுப்பும் மாதிரியும் கச்சேரியில் அல்லது கற்பிட்டி செனிடரி இன்ஸ்பெக்டர் கந்தோரில் கேட்டுப் பெற்றுககொள்ளலாம். புத்தளம் கச்சேரியில் அல்லது கற்பிட்டி செனிடரி இன்ஸ்பெக்டரால் கொடுக்கப்படும் விண்ணப்பப்பத்திரக் கடுதாசியில் தங்கள் கேள்விகளை நிரப்பி யனுப்பவேண்டும்.

5. ஒவ்வொரு கேள்விக்காரரும் இவ்வேலைக்காகக் கேள்விப்பத்திரம் அனுப்புவதற்குமுன் கச்சேரியில் ஐந்து ரூபாய் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுத் தனது கேள்விப் பத்திரத்துடன் அனைத்து அனுப்பவேண்டும். அப்படியல்லாத பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விக்காரர்கள் அனுப்பிய பணம திருப்பிக் கொடுக்கப்படும்.

6. அனுகூலமான கேள்விக்காரரோ அல்லது கேள்விக்காரர்களோ கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளபபட்ட ஒரு கிழமைக்குள் கேட்கப்பட்ட தொகையில் பத்தில் ஒரு பங்குப் பணத்தை பிணையாகக் கட்டி பொருத்தத்தை நிறைவேற்றும்பொருட்டு ஒரு சாதனம் எழுதிக் கொடுத்தல் வேண்டும். இதைச் செய்யத் தவறினால் ஐந்தாம் பிரிவிற் சொல்லிய கேள்விக்காரரால் கட்டப்பட்ட பணத்தொகையை பறிமுதற்செய்ய சுகாதார சங்கத்தலைவருககு உரிமையாயிருக்கும். இந்தக் கேள்விப்பத்திரத்தின் முழுப் பாகத்தையாவது ஒரு பாகத்தையாவது அங்கீகரிப்பதற்கு அல்லது தள்ளுகிறதற்கு சுகாதார சங்கத்தலைவருக்கு உரிமையிருக்கும்.

ஆர் சிந்தாமணி,
சுகாதார சங்கத் தலைவருக்காக.

புத்தளம் கச்சேரி,
1934 ம் ஆண்டு புரட்டாசிமீ 4 ந் திகதி.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

கொஸ்கமாவிலிருக்கும் சார்ள்ஸ் பெரேரு சேனநாயகா ஆகிய நான் கொழும்பு டிஸ்திறிக் கோட்டில் இதனால் அறிவிப்பது யாதெனில் 1907 ம் ஆண்டு-த்து ஆர்டினென்ஸ் 1 செடியூல் 1 B யின் 2 வது சட்டப்படி இதற்கு 3 மாதத்திற்குப் பின் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ் பப்ளிக்ஆவதற்கு படிக்க ரிஜிஸ்டர் ஜெனறலிடம் கொழும்பு டிஸ்டிறிக் கோட்டில் விண்ணப்பஞ்செய்துகொள்கிறேன்.

1934 ம் ஆண்டு ஆகஸ்டுமீ 15 ந் திகதி.

சார்ள்ஸ் பெரேரு சேனநாயகா.

———

இத்தால் சகலருமறியவேண்டியது, இரத்தினபுரியைச்சேர்ந்த குருவிட்டி கோறளை மன்வலையில் வசிக்கும் குட்டிகந்தே விதானலாகே புஞ்சிமகத்தமயா ஆகிய நான் 1907 ம் ஆண்டின் கட்டளைச்சட்டத்தின் 1 ம் பிரிவின் 1 B ஆகிய பிரமாணப்படி இன்னும் 3 மாசத்தின்பின் இரத்தினபுரி பகுதியில் (சிங்களத்தில்) ஓர் பிரசித்த நொத்தாரிஸ் ஆகக் கடமைபார்க்கவும் பதியப்படவும், அரசினர் பதிவு கந்தோர்த் தலைவர்க்கு விண்ணப்ப மனுப்பி இருக்கின்றேன் என்பதை அறியத்தருகிறேன்.

மன்வலை, 1934 ம் ஆண்டு புரட்டாதிமீ 1 ந் உ.

கே. வீ. புஞ்சிமகாத்மயா,

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.